1979 அக்டோபர் 29]

(ஈ) கட்டிடங்கள் (குத்தகை வாடகைக் கட்டுப்பாடு) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப் பாடு) திருத்த சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

3. அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம்—விவாதம்—(தொடர்ச்சி).

*டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு மீது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும், மற்றும் உள்ள எதிர்க்கட்சியினர் பலரும் கொண்டு வந்திருக்கக்கூடிய கண்டனத் தீர்மானத்தை எதிர்த்து அரசின் கொள்கைகளை விளக்கி ஆட்சிக் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

பேராசிரியர் அவர்கள் பேசுகின்றபொழுது அதிலே மிகத் தெளிவான அரசியல் கொள்கை விளக்கம் இல்லை என்பதும், அதேநேரத்திலே நல்ல அருமையான திறமையைப் பயன்படுத்தி தனித் தமிழிலே நல்லதொரு விரிவுரையாகவே எடுத்துவைத்தார் என்பதும் நமக்குத் தெரிகிறது. அதை நான் அவர்களுடைய மாணவனாக இருந்து இந்த அவையில் கேட்டுக்கொண்டிருந்தேன். மொத்தத்தில் அந்த உரையைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், காகிதப் பூ மணக்காது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை இனிக்காது என்ற நிலையிலேதான் அதனுடைய முழு வடிவம் இருந்தது என்று நான் கருதுகிறேன்.

ஆனால் அதே நேரத்திலே, பேராசிரியர் அவர்கள் பேசுகின்றபொழுது சில நேரங்களில் சில உண்மைகளைச் சொல்லிவிடுவதும் உண்டு. அந்த வகையில் அவர்கள் இரண்டு உண்மைகளைப் பேசினார்கள். அதாவது, அரசு நடத்துவது என்பது